**செய்தி வெளியீடு** **நாள் : 19.07.2024**

**செங்கல்பட்டு மாவட்டம், ஆலந்தூர் மற்றும் பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையர் ஒன்றியம், பொழிச்சலூர் மற்றும் கவுல் பஜார் ஆகிய கிராமங்களில் மழைநீர் கால்வாய் அமைத்தல், சாலைகள் மற்றும் பூங்காக்களை மேம்படுத்துவதற்காக ரூ.11.37 கோடி நிதியை மாண்புமிகு அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் செங்கல்பட்டு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் ஆட்சியர் செல்வி.அனாமிகா ரமேஷ், இ.ஆ.ப., அவர்களிடம் வழங்கினார்.**

******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (19.07.2024) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** செங்கல்பட்டு மாவட்டம், ஆலந்தூர் மற்றும் பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையர் ஒன்றியம், பொழிச்சலூர் மற்றும் கவுல் பஜார் ஆகிய கிராமங்களில் மழைநீர் கால்வாய் அமைத்தல், சாலைகள் மற்றும் பூங்காக்களை மேம்படுத்துவதற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து ரூ.11.37 கோடி நிதியை செங்கல்பட்டு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் ஆட்சியர் செல்வி.அனாமிகா ரமேஷ், இ.ஆ.ப., அவர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.இ.கருணாநிதி அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை இணைச் செயலாளர் திரு.ஷ்ரவன் குமார் ஜடாவத், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.